மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இ ண்டாம் நிதித் திட்டத்திலே எடுக்க முடியாத நிலைமையிலே அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இராஜபாளையத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடம்

*வினா எண். 234—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) இராஜபாளையத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சுமார் 2 இலட்சம் பெறுமானம் உள்ள 1,110 ச. அடி நிலம் வருடத்திற்கு ரூ. 12-க்கு மில் உரிமையாளருக்கு குறைந்த குத்தகைக்கு விட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) வினாவில் குறிப்பிட்டுள்ள நிலத்தை இராஜபாளையம் ஜானகிராம் மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு 72-ம் ஆண்டில் 5 ஆண்டுகளுக்கு குத்தகை விடப்பட்டது. மீண்டும் 77 ஆம் ஆண்டில் 2 வருடங்களுக்கு குத்தகைக்கு நீட்டிக்கப் பட்டது.

(ஆ) மேலும் குத்தகைக்கு நீட்டிக்குமாறு விண்ணப்பித்த போது அவ்விடத்தில் சாலையை அகலப்படுத்த வேண்டியிருந்த தால் அது மறுக்கப்பட்டது.

[முற்பகல் 9–50]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர் களே, அந்த இடத்தை அரசாங்கத்திலிருந்து குத்தகைக்கு எடுத் துக்கொண்டு, அரசு அனுமதி இல்லாமல் அங்கே மாடிக்கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் நெடுஞ்சாலைத் துறை அந்த சாலையை அகலப்படுத்த இருப்பதால் அந்தக் கட்டிடத்தை இடிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமா? இதற்குக் காரணமாக இருந்த, குறைந்த குத்தகைக்கு விட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, குத்தகைக்கு விடும்போது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுத் தான் அது குத்தகைக்கு விடப்பட்டது. அந்த 1,410 சதுர அடி நிலம் 1972 ஆம் ஆண்டில் 6 ரூபாய்க்கு மட்டுமே குத்த

கைக்குக் கொடுக்கப்பட்டது. அது 5 ஆண்டுகளுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்தில் நிரந்தரமான கட்டிடங்கள் எதுவும் எழுப்பக்கூடாது என்ற நிபந்தனையும் ஏற்கனவே இருக்கிறது. நிரந்தரமான கட்டிடம் இருக்குமானால் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைக்குச் சொந்தமான புறம்போக்கு இடங்களை ஏழைகள் ஆக்கிரமிக்கும்போது பளிச்சென்று வெளியே தெரிகிறது. பணக்காரர்கள் ஆக்கிரமிக்கும்போது வெளியே தெரிவது இல்லை. எனவே பணக்காரர்கள் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்க, அரசாங்கம் கண்காணிப்புக் குழு அமைக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பணக்காரர்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும் குறிப்பாக நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் ஆக்கிரமிப்புகள் இருந்தால் அவைகள் அகற்றப்பட்டு வருகின்றன. அதற்குக் காரணம், ஒவ்வொரு சாலையையும் அகலப்படுத்தவேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. சாலைகளை அகலப்படுத்த வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், சில இடங்களில் சாலைகள் கோணலாக இருந்தால் அவற்றை நேர்படுத்துவதற்கும் ஆங்காங்கு இருக்கும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன. ஆக்கிரமிப்பு யார் செய்தாலும் அது அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையூர் நகரில் புறச்சாலை.

* வினா எண். 235—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) துறையூர் நகரில் புறச்சாலை (Bye-p..ss Road) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) & (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.